[23rd November 1963

கம்போஸ்ட் உர உற்பத்தி (கடன் உதவி)

*514 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1962-63-ல் கீழ்பெண்ணத்தூர் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த எத்தனை ஊராட்சி மன்றங்களுக்கு "கம்போஸ்ட் உரம்" தயாரிக்க கடன் உதவி கொடுக்கப்பட்டது ?

(இ) அவைகளால் தயாரிக்கப்பட்ட உரத்தின் மதிப்பு எவ் வளவு?

THE HON. SRI P. KAKKAN : (a) Nil.

(b) Nil.

வேளாங்கன்னித் திருவிழா

*515 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் நாகை தாலுகாவில் சமீபத்தில் நடந்த வேளாங்கன்னித் திருவிழாவின்போது தொத்து நோய் மற்றும் இதர வியாதிகளால் பாதிக்கப்பட்டவர்கள், மரண மடைந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) தடுப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டனவா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) நாகப்பட்டினம் தாலுகாவில் 14-9-63 தேதியோடு முடிவடைந்த வாரத்தில் 56 பேருக்குக் காலரா கண்டு 7 பேர் இறந்துபோனார்கள்.

(இ) இதர பகுதிகளுக்கும் காலரா பரவாதபடி தகுந்த ஏற்பாடுகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

10-30 a.m. திரு. ஆ. கு. சுப்பையா : இந்த காலரா வியாதி வேளாங்கன்னி கோவிலில் நடைபெறும் திருவிழாவிற்கு வெளி மாகாணங்களி லிருந்து வந்தவர்களிடமிருந்து தான் பரவியது என்று சொல்லப் படுகிறதே அது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நமது நகரத்தை பொறுத்தவரையில் வெளி மாகாணங்களிலிருந்து வருகின்ற வர்களினால் தான் இந்த வியாதி பரவுகின்றது என்று சொல்ல முடியும். வேளாங்கன்னியில் 'பில்க்ரிமேஜ்'-க்காக அனேகம் பேர்கள் வருகின்றார்கள். இதன் காரணமாகவும் வியாதி பரவும்.

MR. DEPUTY SPEAKER : As there are a large number of questions to be answered and to-day being the last day, I think the House has no objection to extend the question hour till we dispose of the remaining Questions.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I suggest that supplementary questions need not be put for all the questions

23rd November 1963]

unless there are important questions. Either they may be printed in the Official Proceedings or they may be answered but there may be no supplementary questions. Otherwise, it will take more than half an hour.

MR. DEPUTY SPEAKER : I will do that.

காலரா நோய் (திண்டிவனம் வட்டம்)

*516 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் திண்டிவனம் வட்டம் கூச்சிக்கொளத்தூரில் காலராவினால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் திண்டிவனம் அரசாங்க மருத்துவ மனையில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) மேற்படி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட காலரா கண்ட பெண்கள் உடல்நலம் சரியாவதற்கு முன்பே லேடி டாக்டரால் வெளியே அனுப்பப்பட்டது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 9.

(இ) 4.

(உ) இல்லை.

திரு. ஆ. தங்கவேலு : கனம் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்கள் அனேகம் பேர்கள் பெண்களாக இருப்பதால், அந்த மருத்துவ மனையில் இருந்த லேடி டாக்டரின் கவனக்குறைவினாலும், சரியான முறையில் சிகிச்சை செய்யப்படாததினாலும் தான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இனிமேலாவது லேடி டாக்டர் சரியானபடி சிகிச்சை செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்யுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இங்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகள் பூரணமாக குணமடைந்துதான் போயிருக்கிறார்கள். இதற்கான சிகிச்சையும் நல்ல முறையில்தான் செய்திருக்கிறார்கள். எபிடாமிஜிக்கல் வான் மூலமாக மருந்துகள் கொண்டு போய் சிகிச்சை செய்திருக்கிறார்கள். அங்கு ஏற்பட்ட நோயை தக்க முறையில் சிகிச்சை செய்திருக்கிறார்கள். ஆகவே லேடி டாக்டர் பேரில் எந்தக் குறையும் சொல்வதற்கில்லை.

Village works (grants)

*517 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to allot funds to the Panchayat Union Councils under 'Local Roads Grants' and 'Village Works Grant' taking into consideration (i) their area and (ii) the number of Panchayats they have under their control?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS